## இலங்கை கலைகள் மன்றம் - 2013

இலங்கை கலைகள் மன்றத்தின் 2013 திசெம்பர் 31இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவுக் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 44 ஆம் இலக்க இலங்கை கலைகள் மன்ற (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 15(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை மன்றத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை 2013 இன் ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2013 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் படி இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு (ISSAI 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2 கணக்கீட்டுத் தத்துவங்களைப் பின்பற்றியிராமை

நிதிக்கூற்றுக்களின் பகுதியாக காசுப் பாய்ச்சல் கூற்றும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மன்றத்தினால் மீளாய்வாண்டிற்காக காசுப் பாய்ச்சல் கூற்றும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டில் வருமான செலவினக் கணக்கில் பதிவழக்கப்பட்டிருந்த ரூபா 54,200 பெறுமதியான கடன்பட்டோரும் முற்பணங்களும் மீளாய்வாண்டில் மீண்டும் வருமான செலவினக் கணக்கிற்கு அறவிட முடியாத கடனாக பதிவழிக்கப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியினால் பற்றாக்குறை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) திரண்ட நிதியக் கணக்கின் முன்னைய ஆண்டிலிருந்து முன்னெடுத்துவரப்பட்டிருந்த ரூபா 1,333,916 ஆரம்ப மீதி மீளாய்வாண்டில் ரூபா 1,390,322 எனக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், முற்பணக் கணக்கில் முன்னைய ஆண்டில் மீதியொன்று காணப்படாதிருக்கையில் ஆரம்ப மீதியாக ரூபா 53,000 காண்பிக்கப்பட்டிருந்தமையால் கணக்குகளின் சமப்படுத்துகை தொடர்பில் கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகவிருந்தது

(iii) கலைகள் மன்றத்தினால் அச்சிடப்பட்டிருந்த ரூபா 68,930 கிரயம் கொண்ட 3 நூல்களில் 230 பிரதிகள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் காசு அனுப்பப்படும் அடிப்படையில் வெளிவாரி 5 புத்தக வெளியீட்டாளர்களுக்கும் கலாச்சார திணைக்களத்திற்கும் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதிகளுக்காக பணம் கிடைக்கப்பெறாமையால் இருப்புக்கு எடுப்பதற்கோ அல்லது

நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இருப்புப் பதிவேட்டின் படி, மன்றத்தினால் அச்சிடப்பட்டிருந்த 3 நூல்களில் 1039 பிரதிகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் எஞ்சியிருந்த போதிலும், ரூபா 410,230 தொகையான அவ் இருப்புக்களின் பெறுமதி இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்குரிய 843 கலைகள் சஞ்சிகைகளின் பெறுமதியான ரூபா 73,210 இருப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2005 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த இரண்டு பதவியணி உத்தியோகத்தர்களிற்காக அந்த ஆண்டு முதல் பணிக்கொடைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், கணிப்பீட்டுக் குறைபாடுகள் காரணமாக மீளாய்வாண்டு தொடர்பில் ரூபா 18,955 குறைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 225(4), 231, 237 (அ) மற்றும் 232(2) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை தயாரித்தல் மற்றும் கொடுப்பனவிற்குரிய அனைத்து முக்கிய ஆவணங்கள், உப உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் அடங்கலாக கோவைப்படுத்தும் உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்படுதல் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் அறிவுரையின் படி இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 264 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்கான தொகைகள் குறித்த பெறுனரால் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது பற்றுச்சீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 164,000 பெறுமதியான 3 உறுதிச்சீட்டுக்களின் |

| | |
|---|---|
| | பெறுமதிகள் பெறுனரால் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பது பற்றுச்சீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 371(இ) | பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த நோக்க உப கட்டுநிதிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 4 உத்தியோகத்தர் களினால் 10 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட உப கட்டுநிதிகளில் எஞ்சியிருந்த ரூபா 78,985 தொகையினை தீர்ப்பதற்காக 11 முதல் 71 நாட்கள் வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது. |
| (iv) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | மீளாய்வாண்டின் திசெம்பர் 15 அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) நிதிப்பிரமாணம் 751(1), 753(1), (2) மற்றும் 754 | பொருள் பதிவேட்டுப் புத்தகம், பொது 44 படிவத்தின் படி முறையாக பேணிவரப் பட்டிருக்கவில்லை. அத்துடன், பொருட்களை பெற்றுக்கொள்கையிலும் வழங்குகையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) நிதிப்பிரமாணம் 754 | ஏற்பாட்டின் படி பொருள் பதிவேட்டுப் புத்தகம் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 494,290 பெறுமதியான நிலையான சொத்துக்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 133,900 பெறுமதியான கணனிகளிற்காக பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2010 சனவரி 19 ஆந் திகதிய பீஈடீ/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனங்களில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, நிதி நிலைமையினையும் நிதி விளைவினையும் காண்பிக்கின்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டிய படிவத்திற்கு இணங்க அவைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உப சபையின் குழுக் கூட்டமொன்றிற்கு உப சபை செயலாளருக்கு ரூபா 750 வீதமும் உப சபை உதவிச் செயலாளருக்கு ரூபா 375 வீதமும் அலுவலக உதவியாளருக்கு ரூபா 200 வீதமும் 9 உப சபையின் குழுக் கூட்டங்களிற்காக அந்த உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டில் ரூபா 80,275 செலுத்தப்பட்டிருந்தது. அவர்கள் கலாசாரத் திணைக்களத்தின் நிரந்தர உத்தியோகத்தர்களாக காணப்பட்டமையால் இதற்காக தாபன விதிகக்கோவையினதும் அரசாங்க நிதிச் சுற்றறிக்கையினதும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தாபனப் பணிப்பாளரிடமிருந்தும் திறைசேரியிடமிருந்தும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறைவேற்றுச் சபையின் அங்கீகாரத்தின் மீது மீளாய்வாண்டில் ரூபா 695,000 நன்கொடைகள் வழங்கப்பட்டிருந்தன. அதில் ரூபா 595,000 கலைஞர்களிற்கும் ஏனைய தரப்பினர்களிற்கும் நிதி உதவிகளை வழங்குவதற்காக 06 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்டிருந்த போதிலும், கலைகள் மன்ற அதிகாரச்சட்டத்தினால் இலங்கை கலைகள் மன்றத்தினை தாபித்தல் நோக்கத்தின் கீழ் நன்கொடைகள் மற்றும் உதவிகளாக நிதிசார் அனுசரணைகளை வழங்க முடியுமென ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2013 இன் பாதீட்டு மதிப்பீட்டில் அல்லது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவுமில்லை. அத்துடன், இவ்வாறு நன்கொடைகளையும் உதவிகளையும் வழங்குவதற்காக மன்றத்தினால் எவ்வித அளவீடுகள், அடிப்படைகள் அல்லது கொள்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதி வளைவுகள் ரூபா 241,052 பற்றாக்குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 465,600 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 224,548 சாதகமான நிலமைக்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 1,479,770 இனால் அதிகரித்திருந்தமை தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி கலைகள் சஞ்சிகை 2013 இதழை அச்சிடுவதற்காக ரூபா 500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அது அச்சிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி உள்நாட்டு நாடகக் கலைக்கு சிறப்பான சேவையினை வழங்கியிருந்த இரண்டு கலைஞர்களை கௌரவிப்பதற்காக 2 இதழ்களை அச்சிடுவதற்கு ரூபா 600,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவை அச்சிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் படி கலைகள் மன்றத்தின் கூட்டங்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களிற்கு ஒரு முறையும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டில் 2 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

### 4.2 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலைகள் மன்ற அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளாலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினாலும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள் அடங்கலான அங்கீகரிக்கப்பட்ட 06 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும்,

மீளாய்வாண்டின் இறுதி வரை நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (செயலாளர்) பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன், கணனி தரவுப் பதிவு செயற்படுத்துனர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய 2 பதவிகளிற்காக 2005 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும், 6 பதவிகளில் 02 பதவிகள் 2014 மே 31 வரை வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந் நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 02 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டம் இல்லாமல் 2013 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருந்த நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் அல்லது கருமங்களின் விபரங்கள் மற்றும் கருமங்களிற்குரிய கால எல்லை உள்ளடங்கலாக விரிவாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பதவியணியினர் நிர்வாகம்

(இ) இருப்புக் கட்டுப்பாடு